**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **D.W.1** | **பெயர் : திரு. யோவான் அருண் செல்வன் த/பெ : திரு.** | **O.S.No.59/2024** | **04.06.2026** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை)

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எந்த சொத்தை பொறுத்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில்தான் உள்ளதா என்றால் இல்லை அது எனது அனுபவத்தில்தான் உள்ளது. வாதியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் சிலுவைபிச்சை. வழக்கின் சொத்தினை வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் எதுவுமே எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் எதுவுமே எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் பட்டா எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்று கேட்டால் 2006 ஆம் ஆண்டு. பி.வா.சா.ஆ.5 ஆவணத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, சம்பந்தம் உண்டு.

வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்.215/3A ஆகும். வழக்கு சொத்தானது வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் அவருக்கு கிடைக்கப்பெற்றது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் எனக்கு தெரியும் என்று சொன்னாலும்

நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் வெளியூரில் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 01.07.2024 முதல் வழக்கு சொத்தில் வாதி முள்வேலி அமைத்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, அது எனது அனுபவத்தில் உள்ளது. வழக்கு சொத்து அனுபவத்தில் உள்ளது என்று காட்டுவதற்கு நான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

பட்டா எண்.2366ல் எனது பெயர் தவறுதலாக இடம் பெற்றுள்ளதை பயன்படுத்தி நான் கடந்த 25.08.2024 முதல் வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd) M. Siva Rajesh, 04/06/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.